| | |
|---|---|
| அனுப்புநர்<br>திரு. த. ஆபிரகாம், இ.ஆ.ப.,<br>சமூக நல ஆணையர்,<br>2வது தளம், பனகல் மாளிகை,<br>சைதாப்பேட்டை, சென்னை--600 015. | பெறுநர்<br>1. அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்கள் (சத்துணவு)<br>2. கூடுதல் கல்வி அலுவலர்,<br>பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை--3. |

ந.க.எண். 31645 / ச.உ.தி –2/2019, நாள் 16.10.2019

ஐயா / அம்மையீர்,

பொருள் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் – சத்துணவு மையங்களை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பராமரிப்பது – மையங்களை சுற்றி தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்வது மற்றும் மின்சார கசிவு இல்லாமல் இருப்பதை உறுதி செய்திட – சில அறிவுரை வழங்குவது தொடர்பாக – தொடர்பாக.

பார்வை அரசு செயலாளர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அவர்கள் தலைமையில் 14.10.2019 அன்று நடைப்பெற்ற திட்ட ஆய்வுக் கூட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள்

*************

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை துவங்க உள்ள நிலையில் சத்துணவு மையங்களை தூய்மையாக பராமரிக்கப்படுவது இன்றியமையாததாகும். எனவே சத்துணவு மையங்களை தூய்மையாக பராமரித்திட கீழ்க்காணும் சில அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

1. சத்துணவு மையங்களில் பராமரிக்கப்பட்டு வரும் உணவுப்பொருட்களுக்குள் எலி, கரப்பான், பல்லி மற்றும் பூச்சிகள் புகாமலிருக்க உணவுப்பொருட்களை மூடி பாதுகாப்பாக பராமரிக்கப்பட வேண்டும். மேலும் உணவுப்பொருட்களை மழைச்சாரல் விழாமலிருக்க ஜன்னல் , சுவற்றை ஒட்டி வைப்பதை தவிர்த்திடுமாறும், உணவுப்பொருட்களை உயரமான இடங்களில் வைத்தும் பராமரித்திடுவதை உறுதி செய்திடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2. சத்துணவு மையங்களை தூய்மையாகவும், காய்கறி கழிவு மூலம் குப்பை சேர்ந்தால் அவற்றை உடனுக்குடன் அப்புறப்படுத்திடவதை உறுதி செய்திடுமாறும் சமைக்கும் இடங்களில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்வதோடு சத்துணவு தயார் செய்யும் சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்கள் சுகாதாரமான முறையில் சமையல் செய்வதை உறுதி செய்திடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது

3. சத்துணவு மையங்களில் உணவுப்பொருட்கள், காய்கறிகள், முட்டை ஆகியவற்றை சுத்தம் செய்ய பயன்படுத்தப்படும் தண்ணீரை மையத்தை சுற்றி தேங்காமல் பார்த்துக்

கொள்வதோடு அவ்வாறு பயன்படுத்தப்படும் தண்ணீரினை பாத்திக்கட்டி காய்கறி தோட்டத்திற்கு பயன்படுத்துவதை உறுதி செய்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. மழைக்காலங்களில் சத்துணவு மையங்களில் மேற்கூரையில் தண்ணீர் தேங்கி அது மின் இணைப்புக்கு பொருத்தப்பட்டுள்ள பிளாஸ்டிக் குழாய்க்குள் புகுந்து மின் கம்பிகளில் மின்சாரம் புகுந்திடவும் இதனால் சுவர் மற்றும் சுவிட்ச் போர்டுகளில் குழந்தைகள் அல்லது சத்துணவுப் பணியாளர்கள் உடல் / கை தொட நேர்ந்தால் மின்சாரம் பாய்ந்து ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே சத்துணவு மையங்களில் மேற்கூரைகளில் தண்ணீர் தேங்காமலிருப்பதை உறுதி செய்வதோடு, சுவர்களில் ஈரம் கசிந்திருந்தால் சுவர்களை தொடுவதை தவிர்த்திடுமாறும் சுவிட்ச் போர்டுகளில் கவனமுடன் கையாள்வதை உறுதி செய்திடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. மழை காலங்களில் தொற்று நோய் ஏற்பட அதிக வாய்ப்புள்ளதால் சத்துணவு மையங்களில் பயனடைந்து வரும் பயனாளிகளுக்கு வழங்கப்படும் குடி தண்ணீர் சுத்தமானதாகவும், காய்ச்சிய நீரை வழங்குவதை உறுதி செய்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

6. மதிய உணவு, வராந்தா அல்லது வகுப்பறை ஒன்றில், குழந்தைகளை அமர வைத்து உணவு வழங்குமாறும், ஓரிடத்தில் உணவுகளை வைத்து, குழந்தைகளை ஒன்றாக நிற்க வைத்து உணவு வழங்குவதை தவிர்த்திடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. மாணவர்களை ஒன்றாக நிற்க வைத்து உணவு வழங்கும்போது, தள்ளுமுள்ளு ஏற்பட்டு சூடான சாம்பார் அல்லது சாப்பாடு மீது குழந்தைகள் விழ வாய்ப்புள்ளதால் எக்காரணம் கொண்டும் மாணவர்களை நிற்க வைத்து உணவு வழங்குவது தவிர்க்கப்பட வேண்டும்.

7. அன்றாடம் தயார் செய்யப்படும் உணவின் ஒரு சிறு பகுதியினை, பாதுகாப்பாக எடுத்து வைப்பதையும், உணவு வழங்கும் அரை மணி நேரத்திற்கு முன்னதாக சமையலர் மற்றும் பள்ளியிலுள்ள ஆசிரியர் ஒருவர் சுவைத்து பார்த்து அதன்பின்னர் குழந்தைகளுக்கு வழங்குவதை உறுதி செய்திடுவதோடு இவ்வாறு ருசி பார்ப்பதற்கு சுழற்சி முறையில் ஆசிரியர்களை நியமனம் செய்து ருசி பார்ப்பது தொடர்பான பதிவேடு பராமரிப்பதை உறுதி செய்திடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

8. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் வழங்கப்படும் உணவுப்பொருட்களை தரமான உணவுப்பொருட்களா என கண்டறிந்து பெற்றுக் கொள்ளுமாறும், தரமற்ற உணவுப்பொருட்களாயிருப்பின் அவற்றை உடனுக்குடன் திருப்பு அனுப்பி தரமான உணவுப்பொருட்கள் பெறுவதை உறுதி செய்திடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

9. முட்டை ஒப்பந்ததாரர்களால் வழங்கப்படும் முட்டைகளின் எண்ணிக்கை, தரம், வண்ண முத்திரை ஆகியவற்றை நன்கு ஆராய்ந்து பெற்றுக் கொள்ளுமாறும், தரமற்ற எடை குறைந்த கெட்டுப் போன முட்டைகள் பெறுவதை தவிர்த்திடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் முட்டை வேக வைக்கும் முன்னர் அவற்றை தண்ணீரில் இட்டு மிதக்கும் முட்டைகள் வேக வைப்பதையும் பயன்படுத்துவதையும் தவிர்த்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் வேக வைத்த முட்டைகளின் ஒடு அகற்றும் போது, அம்முட்டைகள் கெட்டுப்போனதாக தெரிய வந்தால், அவ்வாறான முட்டைகள் குழந்தைகளுக்கு வழங்கப்படுவதும் தவிர்க்கப்பட வேண்டும்.

இவ்விவரங்களை அனைத்து சத்துணவு பணியாளர்களுக்கும் ஆய்வு கூட்டத்தின் போது தெரிவிக்க வேண்டும். இக்கடிதம் கிடைக்கப்பெற்றதற்கு ஒப்புதல் அளிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேற்காணும் அறிவுரைகளை தவறாமல் பின்பற்றிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/– த. ஆபிரகாம்
சமூக நல ஆணையர்

// ஆணைப்படி //

16/10/19

சமூக நல ஆணையருக்காக

16.10.19